

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.2.2026) தலைமைச் செயலகத்தில், காவல் நிலைய அதிகாரிகளின் பயன்பாட்டிற்கென 27 கோடி ரூபாய் செலவில் 300 புதிய நான்கு சக்கர வாகனங்களையும், மோப்ப நாய் பிரிவின் பயன்பாட்டிற்காக 10 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் 60 புதிய வாகனங்களையும் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) ஜி.வெங்கடராமன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (13.02.2026) முகாம் அலுவலகத்தில், மக்கள் நீதி மய்யத்தின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கலைஞானி கமல்ஹாசன் சந்தித்து பேசினார். மக்கள் நீதி மய்யத்தின் பொதுச் செயலாளர் அருணாசலம் உடனிருந்தார்.



காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், தண்டலம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சீர்வரிசை பொருட்களை வழங்கினார். உடன் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன், குன்றத்தூர் ஒன்றியக்குழுத்தலைவர் சரஸ்வதி மனோகரன், துணைத் தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம், நகரச் செயலாளர்கள் பட்டூர் எஸ்.ஜபாருல்லா, கோ.சத்தியமூர்த்தி, குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம் மற்றும் கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் உள்ளனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின்

# எளிய மக்களின் மனங்களில் இடம்பிடித்த மாபெரும் தலைவர்!

## எழுத்தாளர் அழகிய பெரியவன் முகநூலில் பதிவு!

சென்னை, பிப்.14-

எளிய மக்களின் மனங்களில் இடம் பிடித்த மாபெரும் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் என்று எழுத்தாளர் அழகிய பெரியவன் தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.



அவரது பதிவு வருமாறு:-

இந்த ஆட்சி எப்படி இருக்கிறது என்று கிராமப்புறத்தில் இருக்கும் ஒரு வயதான அம்மாவிடம் கேட்டேன்.

“மாசம் பதினஞ்சி ஆனா டான்னு ஆயிற்ரூபா கணக்குல வந்து உளுந்துட்து எப்பா. வேற என்னா ஒணும்? அந்தப்பன் நல்லா இருக்கணும்” என்றார் அவர்.

இன்று காலையில் (13.02.2026) அவரிடம் விசாரித்திருந்தால், தன்னுடைய கணக்கில் ஐந்தாயிரம் ரூபாய் வரவு வைக்கப்பட்டதைச் சொல்லி நெகிழ்ச்சியில் கண்கலங்கி இருப்பார்.

எளிய மக்களின் மனங்களில் இடம் பிடிப்பவர்களே மாபெரும் தலைவர்கள். அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் எளிய மக்களின் மனங்களில் இடம் பிடித்துவிட்ட மாபெரும் தலைவர். இதில் சிறிதும் மிகையில்லை.

ஓர் அரசின் சட்டங்களும், திட்டங்களும் தொழிலதிபர்களுக்கு வரி சலுகைகளாகவும், அரசு ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் பணப் பலன்களாகவும், நிலவுடைமையாளர்களுக்கு மானியங்களாகவும் என பல வகைகளில் சென்று சேர்க்கின்றன. ஆனால் எளிய உழைக்கும் மக்களுக்கோ நலத்திட்டங்கள் என்ற வடிவத்தில் தான் சென்று சேர்க்கின்றன.

ஓர் அரசு இயங்குகிறது, அது தன்னை குறித்து அக்கறை கொள்கிறது என்பதை நலத்திட்டங்களின் வழியாகத்தான் எளிய மக்கள் உணர்ந்து கொள்கிறார்கள். இது ஒரு மனிதரை நேரடியாக அரவணைப்பதை போன்றது. வெறுப்பிலும், வன்மத்திலும் இருக்கிறவர்களுக்கும், செழிப்பில் மிதக்கிறவர்களுக்கும், சமூக விழிப்புணர்வும், மானுட அக்கறையும் இல்லாதவர்களுக்கும் இது புரியவே புரியாது.

ஆனால் எளிய மக்களோ முதல்வரை, நதி மணலின் எண்ணிக்கையைப் போலவும், கழனி விளையும் நெல் மணிகளின் எண்ணிக்கையைப் போலவும் வாழ்க

(“புல் இலை வஞ்சிப் புறமதில்
அலைக்கும் கல்லென்
பொருநை மணலினும்,
ஆங்கண் பல் ஊர் சுற்றிய கழனி
எல்லாம் விளையும் நெல்லினும்
(வாழிய) பலவே”) என்று வாழ்த்துவர்.

இவ்வாறு அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று விருதுகளை வழங்கி சிறப்பிக்கிறார்!

# அனைத்துலக வள்ளலார் மாநாடு - 2026!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, பிப். 14-

அருட்பெருஞ்சோதி வள்ளலாரின் பெருமைக்கு புகழ் சேர்க்கும் வகையில் 2026 பிப்ரவரி 15 அன்று சென்னை, கீழ்ப்பாக்கம், பூந்தமல்லி நெடுஞ்சாலையிலுள்ள அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில் மைதானத்தில் நடைபெறும் அனைத்துலக வள்ளலார் மாநாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு வடலூர் வள்ளலார் சர்வதேச மையத்தில் முடிவுற்ற கட்டுமானப் பணிகளை திறந்து வைத்து, சன்மார்க்கிகளுக்கு விருதுகளை வழங்கி, விழாப் பேருரையாற்ற உள்ளார் என மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.கஸ்டாலின் அவர்கள் அருட்பெருஞ்சோதி வள்ளலாரின் பிறந்த நாளான அக்டோபர் 5 அன்று தனிப்பெருங்கருணை நாளாக கொண்டாடப்படும் என அறிவித்தார்கள்.



மேலும், ரூ. 3.25 கோடி அரசு நிதியில் வள்ளலார் முப்பெரும் விழா ஓராண்டு காலம் தொடர் நிகழ்வாக நடத்தப்பட்ட தோடு, இலட்சினை, சிறப்பு தபால் உறை, விழா மலர் வெளியிடப்பட்டு தொடர் அன்னதானமும் வழங்கப்பட்டது. மேலும், அரசு நிதி ரூ. 100 கோடியில் வடலூரில் வள்ளலார் சர்வதேச மையம் அமைத்திடவும், ரூ.3.50 கோடி நிதியில் வள்ளலார் வாழ்ந்த மருதூர் இல்லத்தை புனரமைத்திடவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தைப்பூசத்தை முன்னிட்டு வடலூரில் தலா 10,000 நபர்கள் வீதம் மூன்று நாட்கள் 30,000 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, வள்ளலாரின் புகழுக்கு பெருமை சேர்க்கும் வகையில் 15.02.2026 அன்று சென்னை, கீழ்ப்பாக்கம், பூந்தமல்லி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில் மைதானத்தில் அனைத்துலக வள்ளலார் மாநாடு மிக சிறப்பாக நடைபெறவுள்ளது. இம்மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு வடலூர் வள்ளலார் சர்வதேச மையத்தில் முடிவுற்ற கட்டுமானப் பணிகளை திறந்து வைத்து, சன்மார்க்கிகளுக்கு விருதுகளை வழங்கி, விழாப் பேருரையாற்றுகின்றார்.

15.02.2026 அன்று காலை 6 மணிக்கு மாநாட்டு பந்தலில் ஜோதி ஏற்றுதல் மற்றும் கொடி கட்டுதலோடு நிகழ்ச்சிகள் தொடங்கி வள்ளலாரின் தத்துவங்கள் மற்றும் அருள்நெறியைப் பரப்பிடும் வகையிலான பேரணியும் நடைபெறுகிறது. இம்மாநாட்டில் வள்ளலாரின் வாழ்க்கை வரலாற்று ஓவியக் கண்காட்சி, மூலிகைக் கண்காட்சி மற்றும் சித்த மருத்துவ முகாம், பள்ளி மற்றும் கல்லூரிகளில் வள்ளலார் குறித்து நடத்தப்பட்ட இலக்கிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகள் வழங்குதல், கலைமாமணி திரு. சுகிசிவம் அவர்கள் தலைமையில் கருத்தரங்கம், கலைமாமணி திருமதி தேச மங்கையர்க்கரசி அவர்கள் தலைமையில் தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக் கழக மாணவியரின் ஞானசரியை, ஆய்வரங்கம், நாள் முழுவதும் அன்னதானம், மாநாட்டு மலர் மற்றும் ஆய்வுக் கட்டுரை மலர் வெளியிடுதல், போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. பல்வேறு வெளிநாடுகளிலிருந்தும், தமிழ்நாடு முழுவதிலிருந்தும் சன்மார்க்கிகள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர் என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

### பிப்.15 இல் சென்னை அண்ணா அறிவாலயத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையிலான

# கழகத் தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவினர் கருத்துக் கேட்பு!

## காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழகத்தினருக்கு க.சுந்தர் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

காஞ்சிபுரம், பிப்.14-

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி அமைக்கப்பட்ட கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலமையிலான கழகத் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவினர் சென்னை அண்ணா அறிவாலயத்தில் வருகிற 15 ஆம் தேதி அன்று காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தினரிடம் கருத்துக் கேட்புக் கூட்டத்தினை நடத்துகிறார்கள். எனவே இந்த கருத்துக்கேட்புக் கூட்டத்தில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகத்தினர், விவசாயப் பெருங்குடி மக்கள், தொழிலாளர்கள், தொழிலதிபர்கள் என்று அனைத்துத் தரப்பினரும் வருகை தந்து தங்களின் கோரிக்கைகளை வழங்கிடலாம் என்று காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இது குறித்து காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு தலைமைக் கழகத்தின் சார்பில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி அமைக்கப்பட்ட கழகத் தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவினர் கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் தி.மு.க.தேர்தல் அறிக்கையில் இடம் பெறக் கூடிய கருத்துகளை கோரிக்கைகளை நேரில் கருத்துக் கேட்டும் கோரிக்கை மனுக்களாக பெற்றும் வருகிறார்கள்.

அந்த வகையில் வருகிற 15.2.2026-ஞாயிற்றுக்கிழமை அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகத்தினரிடம் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையிலான கழகத் தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவினர் கருத்து மற்றும் கழகத் தேர்தல் அறிக்கையில் இடம் பெற வேண்டிய கோரிக்கைகளை மனுவாக பெற இருக்கிறார்கள்.

எனவே காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்து மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு கிளைக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கழக முன்னணித் தோர்கள் மட்டுமின்றி காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள தொழிலதிபர்கள், விவசாயப் பெருங்குடி மக்கள், தொழிலாளர்கள், பல்வேறு சங்க நிர்வாகிகள், பிரதிநிதிகள், நெசவாளர்கள், சமூக ஆர்வலர்கள் என்று அனைத்துத் தரப்பினரும் தங்கள் பகுதியில் நிறைவேற்றப் பட வேண்டிய திட்டங்கள், குறைகள், கோரிக்கைகள் அனைத்தையும் கோரிக்கை மனுவாக அளிப்பது மட்டுமின்றி தங்களி கருத்துக்களை நேரில் தெரிவித்திடவும் வருகிற 15.2.2026 அன்று காலை சென்னை அண்ணா அறிவாலயம் வருகை தந்து கழகத் தேர்தல் அறிக்கைத் தயாரிப்பு குழுவினரிடம் வழங்கிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.




UGC கொண்டு வந்த உயர்க்கல்வி நிறுவனங்களில் சமத்துவத்தை மேம்படுத்துதல் ஒழுங்குமுறை 2006 என்ற விதியை அமல்படுத்தவிடாமல் உச்சநீதிமன்றம் தடை விதித்துள்ளது. இந்த விதியை அமல்படுத்தாமல் மேம்போக்காக இருந்த ஒன்றிய அரசைக் கண்டித்தும் உடனடியாக அந்த விதியை அமல்படுத்தக்கோரியும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் மாணவர் அமைப்புகளின் கூட்டமைப்பான FSO–TN சார்பில் சென்னை சிவானந்தா சாலையில் பேரணியும் ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது.




விழுப்புரம் வடக்கு மாவட்டம், செஞ்சி சட்டமன்றத் தொகுதி தனலக்ஷ்மி மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை நிகழ்ச்சியில், கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன் எம்.பி, உழவர் நலன் மற்றும் வேளாண்மை துறை அமைச்சரும் விழுப்புரம் மண்டலப் பொறுப்பாளருமான எம்.ஆர்.பன்னீர்செல்வம் மற்றும் விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டனர். உடன் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர்.சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் சேதுநாதன், மாசிலாமணி, கழகத் தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஒன்றியச் செயலாளர் ஆர்.விஜயக்குமார், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாநிலத் துணைச் செயலாளர்கள் ஏவிஆர்.கோபால்ராம், சுரேஷ் ஜெ.மனோகரன், வே.கௌதமன், முகமது இஸ்ரத், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் க.சந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.